International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 02 April to June 2021 www.irjtsjournal.org

# காதல் வெளிப்பாட்டில் கிள்ளையும் தூதும்

[1]முனைவர் செ.ரவிசங்கர், [2]பா.முருகன்

*[1]உதவிப் பேராசிரியர், [2]முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*

*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21*

**முன்னுரை**

'கேட்குன பலவும் கிழக்குன பலவும்'

பேசாதவற்றையும், கேட்காதவற்றையும் உணர்ந்து அனுப்புவது தூது. பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. 'காமம் மிக்க கழிபடர் கிளவி எனும் தொல்காப்பிய அடியின் மூலம் தோன்றிய இலக்கியமாகும். இது அகத்தூது, புறத்தூது என இரண்டு வகைப்படும். குறுந்தொகை, நற்றிணை போன்ற சங்க அக இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் தலைவியின் காதலை தலைவனுக்கு உணர்த்தப் பயன்பட்டப் பொருள்கள் அகத்தூது எனும் பிரிவில் அடங்கும். தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர் பெருமாட்டியான ஔவையார், புறநானூற்றில் அதியமானுக்காக தொண்டை மன்னனிடம் தூதாகச் சென்றமை, மேலும் அனுமன், அங்கதன், கர்ணன், கண்ணன் போன்றோர் காப்பியங்களில் தூதாகச் சென்றமை புறத்தூது என்னும் பிரிவில் அடங்கும். திருக்குறளில் அகத்தூது, புறத்தூது இரண்டினையும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். மேலும்

"அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூது உரைப்பார்க்கு

இன்றியமையாத மூன்று" - 681

என்று தூது உரைப்பவனின் பண்புநலன்களையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கதாகும். தூது இலக்கியம் என்பது தன் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிக்க தன் சார்பாக உயர்திணைப் பொருள்களையோ, அஃறிணைப் பொருள்களையோ தூதாகக் கொண்டு பாடப்படுவதாகும்.

"இயம்புகின்ற காலத்து எகினம், மயில் கிள்ளை பயில்பெறு மேகம் பூவை பாங்கி

நயந்த குயில் பேதை நெஞ்சம், தென்றல், பிரமரம்

ஈரைந்துமே தூதுரைத்து வாங்கும் தொடை"

போன்றவையே தூதுரைப்பதற்கு ஏற்றனவாக பிரபந்த திரட்டு குறிப்பிடுகின்றது. இவற்றிற்கினங்க திருமாலிருஞ்சோலையில் வீற்றிருக்கும் அழகர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் காதலை தலைவனுக்கு உரைத்து அவரிடமிருந்து தூதாக மாலை வாங்கி வரும்படி கிளியை தூதாக விடுப்பதே பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இயற்றிய 'அழகர் கிள்ளை விடு தூது' என்னும் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் இடம்பெறும் தலைவியின் காதல் வெளிப்பாட்டினையும், தன்துயர் நீக்க வேண்டி கிள்ளையை விளித்து தூது விடுப்பதனையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**கிள்ளை, அரியின் சிறப்புரைத்தல்**

பிரபந்தத் திரட்டு குறிப்பிட்ட தூதுரைக்கும் பொருட்களில் கிளி ஒன்றாகும். பஞ்சவர்ணங்களைக் கொண்டு பேசும் திறம் பெற்று அனைவரிடமும் அன்பினைப் பெற்ற பறவையாகும். தோல்காப்பிய உரையாசிரியரான இளம்பூணர் தனது உரையில் மனிதனுக்கு இணையாக ஆறறிவினைப் பெற்ற உயிர்களாக குறிப்பிடும் உயிர்கள் மூன்றில் கிளியினையும் ஆறறிவு உடைய உயிராகக் குறிப்பிடுகிறார். அவரின் கூற்றிற்கு ஏற்ப கிள்ளை நன்கு பேசும் ஆற்றல் பெற்று சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்னும் பெயர் பெற்றுள்ளது. ஆகவே தூதுப் பொருட்களில் கிள்ளை சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. சங்க அக இலக்கியங்களிலும், பக்தி மற்றும் சிற்றிலக்கியம், காப்பியங்களிலும் கிளித்தூது வெகுவாகவே காணப்படுகின்றது. பிற பறவைகளிலும் கிள்ளை சிறப்பிடம் பெற்றதனை

"எவ்வண்ணமாய்ப் பறக்கும் எப்பறவை ஆயினும் உன்

ஐவண்ணத்துள்ளே அடங்கும்மே – மெய்வண்ணம்”– 7

என்னும் பாடலின் வழி அறியலாம். மேலும் தெய்வங்களுக்கெல்லாம் பரம்பொருளான பாம்பு படுக்கை கொண்ட திருமாலோடு கிள்ளையை ஆசிரியர் ஒப்புமைப்படுத்திக் குறிப்பிட்டுள்ளமை அதன் சிறப்புகளில் ஒன்றாகும். இதனை

“கார்கொண்ட மேனிக் கடவுள் பெயர் கொண்டு

நீர் கொண்ட பாயல் நிறம் கொண்டு – சீர் கொண்ட” 1

என்னும் தூது இலக்கியப் பாடலின் வழி அறியலாம். ஐங்குநுறூற்றில் கிள்ளைப் பத்தில் தலைவன் தலைவியின் பண்புநலனைக் குறிப்பிடும் போது அதற்கு கிள்ளையினை உவமையாகக் கூறி இலக்கியம் படைத்துள்ளமை நோக்கத்தக்கதாகும். கிள்ளை செங்கோல் ஆட்சி புரியும் அரசனை விட உயர்ந்த பண்பு கொண்டவை என்று உரையாசிரியர் ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். இதனை

“அறம்புரி செங்கோல் மன்னனின் நாம்நனி

சிறந்தன போலும், கிள்ளை பிறங்கிய

பூக்கமழ் கூந்தல் கொடிச்சி

நோக்கவும் படுமவள் ஒப்பவும் படுமே” - 290

ஏன்னும் ஐங்குநுறூற்றுப் பாடலின் வழி அறியலாம். இவ்வாறாகக் கிள்ளையின் சிறப்பினைக் கூறி ஐம்பூதங்களுள் ஒன்றாகவும், அரி, அயன், அரன் ஆகிய மூன்று பரம்பொருள்களுள் ஒருவனாகக் கிள்ளையை குறிப்பிட்டு தன் காதல் நிலையினைத் உரைத்து தலைவி அதனை விளிப்பதாகக் கூறுகிறார்.

மேலும் காணுதற்கரிய கரிய நிறம் கொண்ட கண்ணன் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களைச் செய்வதில் வல்லவன் என்பதனை பரிபாடலில் 62-72 எனும் அடிகளின் வாயிலாக உணரலாம். மகாபாரதத்தில் அஸ்தினாபுரத்தில் கௌரவர்களால் புறக்கணிக்கப்பட்ட யாதவ குல மக்களை கண்ணன் ஆதரித்து அவர்களுக்கென துவாரகை எனும் நகரினை உருவாக்கிக் கொடுத்து விதி வசத்தால் இறுதியில் அம்மக்களை தன் சுதர்சன சக்கரம் கொண்டு அழிக்கும் தொழில் செய்வது நோக்கத்தக்கதாகும். மேலும் கண்ணன் தனது சிறுபிராயத்தில் செய்த குறும்புத்தனங்களையும், தய் வாய் திறந்து யசோதை தாயிடம் உலகையே காட்டிய சிறப்பினையும் கூறி கிள்ளையை அவன் பால் ஆற்றுப்படுத்துவதனை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

**காதல் வெளிப்பாடு**

அரசன், இறைவன் தன்னுடைய மெய்கீர்த்தியைப் சிறப்பிக்க ஆரவாரங்களுடன் திருவீதியில் உலா வருதல் பழங்காலத்தில் குறிப்பிடத்தக்க செயலாகும். திருவீதி உலா வரும் தலைமகனைக் கண்டு பேதை, பெதும்பை முதலான பெண்கள் காதல் கொண்டதனை உலா இலக்கியத்தில் காணலாம். கிள்ளை விடு தூதில் நகர்வளம் காண வருகின்ற அழகரைக் கண்ட தலைவி காம மேலீட்டினால் தலைவன் மீது காதல் வயப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். இதனை

“பின்னழகு முன்னழகு ஆம் பேரழகைக் காணும் முன்னே

முன்னழகைக் கண்டே நான் மோகித்தேன் - பின்னழகு” -167

எனும் பாடலின் வழி அறியலாம். கண்ணன் சிறுபிராயத்தில் வெண்ணெய்யை திருடி உண்டதைப் போன்று, தலைவி தான் கொண்ட காதல் மோகத்தினால் தன் கைகளிலிருந்த வளையல்களைத் திருடிக் கொண்டதாகக் குறிப்பிடுகிறாள். மேலும் தன் காதல் வெளிப்பாட்டினால் அழகரின் பிரிவை எண்ணி பசலையுற்று தன் ஆடை நெகிழ்வதாகக் கூறுகிறாள். துலைவனைப் பிரிந்த தலைவியர்கள் மனம் வெதும்பி பசலை நோயினால் வாடுவதனை சங்க இலக்கியப் பாடலின் வழியாக அறியலாம். மேலும் அச்சமயத்தில்இயற்கை நிகழ்வுகள் அனைத்தும் தலைவியர்களை வாட்டுவதையும் காணலாம். கிள்ளை விடு தூதில் அழகரைப் பிரிந்து வாடும் தலைவிக்கு நிலவு, கடலோசை, தோழியர் பழிச்சொல், தென்றல் போன்றவை அவளை வாட்டுவதாக ஆசிரியர்

குறிப்பிடுகின்றார். இதனை நெடுநல்வாடை என்னும் இலக்கியத்தில் காணலாம். போருக்குச் சென்ற அரசனைப் பிரிந்த அரசமாதேவிக்கு தென்றல் காற்று நெடியதாகித் துன்பம் தருவதனை

"வாடை நலிய வடிக்கண்ணாள் தோள்நசைஇ

ஓடை மழகளிற்றான் உள்ளான் கொல் - கோடல்

முகையோடு அலமர, முற்றுளரி போல்பொங்கி

பகையோடு பாசறை உளான்"

என்னும் வெண்பா பாடலின் வாயிலாக நாம் உணரலாம்.

**கிள்ளையை விளித்தல்**

தலைவன் மீது காதல் கொண்ட தலைவியா் தான் உற்ற காதலை தலைவனுக்குத் தெரிவிக்க அ.்.றிணைப்பொருட்களைத் தூதுரைப்பது தூது இலக்கியத்தின் வழக்காகும். கிள்ளை விடு தூதில் திருமால் மீது காதல் கொண்ட தலைவி தன்னுடைய காதலை வெளிப்படுத்தக் கோரி கிளியை தூது செல்லும்படியாக விளிக்கின்றாள். பக்தி இலக்கியங்களிலும் இறைவன் மீது காதல் கொண்ட தலைவியா் புள்ளினங்களை விளித்து தன் தலைமகனின் சிறப்பினைக் கூறி, அவனின் திருநாமத்தினை தன் வாயால் உரைக்கும்படிக் கோருவதனை திருஞானசம்பந்தரின் தேவார முதற்பதிகத்தில்

"சிறை ஆரும் மடக்கிளியே! இங்கே வா! தேனோடு பால்

முறையாலே உனத் தருவேன் மொய் பவளத்தோடு தரளம்

துறை ஆரும் கடல் தோணிபுரத்து ஈசன்! துளங்கும் இளம்

பிறையாளன் திரு நாமம் எனக்கு ஒரு கால் பேசாயே" - 654

என்னும் பாடலின் வழியாக நாம் உணரலாம். கிள்ளை விடு தூதில் தலைவனைப் பிரிந்த தலைவி தன் உடல் பசலையால் வாடியிருப்பதனை கிளியின் பசுமை நிறத்தோடு ஒத்திருப்பதாகக் கூறித் தன் நோயைப் போக்க வருமாறு கிள்ளையை விளிக்கிறாள். நீ விரும்பும் மாங்கனி, கொவ்வைப் பழங்களை நான் உனக்கு வழங்குவேன். ஊன்னை குளிா்வித்து உனக்கு ஏற்ற பட்டாடையையும் நான் உனக்கு வழங்குகிறேன், என்னுடைய மனம் கவா்ந்த எம்பெருமானின் நாமத்தையும் உனக்குப் பேசக் கற்றுக் கொடுப்பேன் என்று கிள்ளையோடு தலைவி அன்பு பாராட்டுவதனை,

"ஊட்டுவேன் உன்னை உருப்பசியாய் என்ன நலங்

காட்டுவேன் பட்டாடையால் துடைப்பேன் - கட்டில்" - 195

"ஈசன் திருநாமம் எல்லாம் என்போல் உனக்குப்

பாசம் தொலையப் பயிற்றுவேன் - பேசுஎன்றே" - 198

என்னும் பாடலின் மூலம் அறியலாம்.

**கிள்ளையை தூது விடுத்தல்**

நாரை, அன்னம், குருகு, காக்கைப் போன்ற தூது விடுக்கும் புள்ளினங்கள் இருப்பினும் உன்போல் சிறப்புண்டு என் தூதினை உரைப்பாருண்டோ என்று மற்றப் புள்ளினங்களின் நிலையினைக் கூறி, அவையெல்லாம் என் தூதிற்கு தகுதியில்லாதன எம்பெருமானிடம் என் நிலையினைக் கூறும் தகுதி உன் ஒருவனுக்கே உண்டு என்று கிள்ளையின் சிறப்பினைத் தலைவி உரைத்து அதனைத் தூது விடுப்பதனை,

"அன்பாய் வளா்த்த தாயாருக்கு உதவாக் கோகிலம் தான்

ஏன்பால் அருள் வைத்து இயம்புமோ தன்பேர்" - 200

"அரி என்று சொன்னால் அளி என்று சொல்லும்

வுரிவண்டு பேசி வருமோ – விரகம் செய்" - 210

ஏன்னும் பாடல்களின் வழி உணரலாம். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியில் குணமாலை கிளியை தூது அனுப்புகிறாள். நற்றிணை 102 வது பாடலில் தலைவி தலைவனுக்குச் சென்று தான் திணைப்புனத்தில் இருப்பதைக் கூறுவாயாக என்று கூறித் தூது விடுப்பதனை

"கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி!

அஞ்சல் ஓம்பி, அவர்பதம் கொண்டு

நின்குறை முடித்த பின்றை என்குறை

செய்தல் வேண்டுமால் கைதொழுது இரப்பல்

பல்கோள் பலவின் சாரல் அவர்நாட்டு

நின்கிளை மருங்கின் சேறிஆயின்

அம்மலை கிழவோற்கு உரைமதி இம்மலைக்

கானக் குறவர் மடமகள்

ஏனல் காவல ஆயினள் எனவே" - 102

என்னும் பாடலின் வழியாக நாம் அறியமுடிகிறது. மேலும் தன் காதலை தலைவன் மட்டுமே அறியும் வண்ணம் பிற மொழிகளில் வகைப்படுத்தியும் கூறுவதாகவும் தன்னை வாட்டும் துயரினை அழிப்பதாகவும் எண்ணி, கையில் சங்கினைத் தாங்கி உள்ளவரும், உண்மை, அறிவு, இன்பம் ஆகியவற்றின் முழுவடிவானவருமான அழகர் தன் காதலை ஏற்றதன் அடையாளமாக அவர் அணிந்துள்ள மாலையை வாங்கிக் கொண்டு வருவாயாக என்று தலைவி தூதுரைப்பதனை ஆசிரியர் எடுத்துக் கூறிச் செல்லும் விதம் சிறப்பிற்குரியதாகும்.

**முடிவுரை**

ஆசிரியர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் தன்னைக் கன்னியாகப் பாவித்து திருமால் மீது காதல் கொண்டு உணர்ச்சி ததும்பும் இவ்விலக்கியத்தைப் படைத்தள்ளார். காதலர் அனைவரும் விரும்பும் வண்ணம் யதார்த்த நடையில் எழுதிச் செல்லும் திறத்திலிருந்து காதல் வெளிப்பாடு தற்போது வளர்ந்து வரும் இளம் தலைமுறையினருக்கும் காதலின்பால் ஓர் உந்து சக்தியை ஏற்படுத்தும் என்பது புலப்படுகின்றது.

**பார்வை நூல்கள்**

1. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு
2. பேரா.செ.ராதாகிருஷ்ணன் (உ.ஆ), அழகர் கிள்ளை விடு தூது
3. ந.வீ.செயராமன், சிற்றிலக்கியச் செல்வம்
4. பி.எஸ்.ஆச்சார்யா (உ.ஆ), திருக்குறள் தெளிவுரை
5. முனைவர் சி.சேதுராமன், தமிழ் இலக்கிய வரலாறு